பாக்கு

1. **நாவாய்ப்பூச்சி, கார்வல்ஹோயா அரிக்கே:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- நடுக்குறுத்து இலைகளில் உள்ள சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும்
- இலைகள் காய்ந்து விழுந்துவிடும்
- நடுக்குறுத்து வளர்ச்சி குன்றி சுருங்கி விரிய முடியாமல் போகும்

**பூச்சியின் விபரம்:**

- இளம் குஞ்சுகள்: கரு ஊதா நிறம் உடலில் தலைப்பகுதி இளம்மஞ்சளாகவும், சிவப்புநிற கண்களும் பெற்றிருக்கும்
- வளர்ந்த புழுக்கள்: வயிற்றுப்பகுதியில் கருப்புநிறம் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறைகள்:**

- டைமீதோயேட் @ 0.05 சதத்தை தெளிக்கவும்
- ஃபோரேட் 10 சத குறுணை 10 கிராம் அளவு ஒரு மரத்திற்கு நடுக்குருத்துப்பகுதியில் போட்டு வைக்க வேண்டும்

2. **வேர்ப்புழு, லூக்கோஃபோலிஸ் பர்மிஸ்டெரி:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- புழுக்கள் வேர்களை கடித்து சேதப்படத்தும்
- தாக்கப்பட்ட மரங்கள் நோய்வாய்ப்பட்டது போல் காட்சியளிக்கும்
- இலைகள் மஞ்சளாகி விடும்
- தண்டு சிறுத்து விடும், காய்கள் கொட்டி விடும்

**பூச்சியின் விபரம்:**

- புழுக்கள்: புழுக்கள் “C” வடிவில் தலை பழுப்பு நிறமாக இருக்கும்
- வண்டுகள்: பழுப்பு நிறத்தில் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறைகள்:**

- வண்டுகளை சேகரித்து அழிக்கவும்
- மரத்திற்கு அடியில் உள்ள மண்ணை கிளரிவிடவேண்டும்
- மண்ணில் கரிம உபபொருட்களையும், ஊண் தடுப்பான்களையும் (வேம்பு, புங்கம், பிண்ணாக்கு) இடவேண்டும்
- ஃபோரேட் 10 சத குறுணையை ஒரு மரத்திற்கு 15 கிராம் வருடத்திற்கு இரண்டு முறை மண்ணில் இடவேண்டும். அதாவது தென்மேற்கு பருவ மழைக்கு (மே) முன்பும், வடகிழக்கு பருவ மழை பின்பும் (செப்படம்பர் - அக்டோபர்) இடவேண்டும்

**3. சோளம் அல்லது வெள்ளை சிலந்தி, ஒலிகோநைகஸ் இண்டிகஸ்:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- இலைகளின் அடிப்பகுதியில் நூலாம்படைகளில் சிலந்திகள் கூட்டமாக இருந்து சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும்

**கட்டுப்படுத்தும் முறைகள்:**

- தாக்கப்பட்ட இலைகளை சேகரித்து எரிக்கவும்

- 1 லிட்டர் தண்ணீரில் 2 மி.லி டைகோபால் அல்லது 1.5 மி.லி ரோகர் கலந்து இலையின் அடிப்பாகத்தில் விழுமாறு தெளிக்கவும். இதைப்போன்று 15 - 20 நாட்கள் கழித்து மீண்டும் தெளிக்கவும்

4. **பூங்கொத்துப்புழு, டிரகாபா முண்டெல்லா:**

**சேதத்தின் அறிகுறிகள்:**

- புழுக்கள் பூங்கொத்துக்களை உண்டு சேதப்படுத்தும்
- புழுக்கள் பூங்கொத்துக்களை நூலாம்படையால் ஒன்றாக பிணைத்து அதனுள்ளிருந்து உண்டு சேதப்படுத்தும்
- பூங்கொத்து விரிவடைவது தாமதமாகும்
- பூங்கொத்து மஞ்சளாக மாறிவிடும்
- பூங்கொத்துக்களின் மேல் சிறு துளைகளும், அதன் கழிவுப்பொருட்களும் இருக்கும்

**பூச்சியின் விபரம்:**

- புழுக்கள்: அழுக்கேறிய வெண்ணிறப் புழுக்கள் தலை பழுப்பு நிறமாக இருக்கும்
- பூச்சி: அந்துப்பூச்சி உடல் சிறியது. இறகுகள் சாம்பல் நிறத்தில் இருக்கும்

**கட்டுப்படுத்தும் முறைகள்:**

- மாலத்தியான் 0.05 சதம் கரைசலை பூச்சி தாக்கிய பூங்கொத்துகளின் மீது தெளிக்கலாம்